# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல.7,304 — 1923 ம் ௵ தை௴ 12 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### காணி விற்பனவுகள்.

**No. 927, N. P.**—1923 ம் ஆண்டு மாசி மாதம் 24 ந் திகதி, வவுனியாவில் தன் ஆபிசில் வடமாகாணத்து முல்லைத்தீவு டிஸ்திறிக் கவண்மேந்து உதவி ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றிச் செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீந்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும். 66 காணித்துண்டுகள், வடமாகாணத்து முல்லைத்தீவு டிஸ்திறிக் வவுனியா தெற்குப்பகுதியி லிருக்கின்றது.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | ரூ. | ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | பிளான் இலக்கம் 5,611. குறிச்சி—வயிரவர்புளியங்குளம். உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | கரம்பைக்காடு | — | ஜேட்டுக் கருகாண்மையாய் விடப்பட்ட நிலம் | 0 | 0 | 21 | —* |
| 2 | ஷை | க. இளையதம்பி | காடு | 0 | 2 | 1 | 50 |
| 3 | ஷை | சு. நல்லதம்பி | வெளிநிலம் | 0 | 2 | 3 | 55† |
| | பிளான் இலக்கம் 5,645. குறிச்சி—வவுனியா. உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | பள்ளத்துவளவு | — | ஜேட்டுக் கருகாண்மையாய் விடப்பட்ட நிலம் | 0 | 0 | 32·17 | —* |
| 2 | ஷை | முருகேசு துரையப்பா | தோட்டச் செய்கைக்கேற்ற கீழ்காடு | 0 | 2 | 0·74 | 72† |
| | பிளான் இலக்கம் 5,652. குறிச்சி—வெளிக்குளம். உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | விளாத்தியடிக்காடு | வ. சின்னையா | உயர்ந்த காடு | 1 | 3 | 30 | 51·50† |
| 2 | பாலையடி வளவு | சி. சுப்பர் | ஷை | 2 | 0 | 0 | 51·50† |
| 5 | ஷை | சீ. காத்தார் | ஷை | 4 | 1 | 9 | 51·50† |
| | பிளான் இலக்கம் 5,729. குறிச்சி—சோனகசாளம்பைக்குளம். உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | பயனியடிக்காடு | மெ. முகம்மதுலெவ்வை | காடு | 1 | 0 | 11 | 17† |
| 2 | பாலையடிக்கமம் | அ. கச்சுமரக்காயர் | காடு | 6 | 0 | 2 | 16 |
| 3 | கரம்பைக்காடு | அ. அகம்மதுநெயினா | காடு | 2 | 3 | 32 | 16 |
| 4 | குருமன்காடு | அ. மீராசாய்பு | காடு | 3 | 3 | 32 | 16 |
| | பிளான் இலக்கம் 5,731. குறிச்சி—பாவட்டங்குளம். உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | புளியடிக்கமம் | சி. பொன்னையா | நெற்செய்கைக்கேற்ற காடு | 4 | 0 | 0 | 16 |
| 2 | ஷை | சி. கதிரவேலு | ஷை | 4 | 0 | 9 | 16 |
| | பிளான் இலக்கம் 5,748. குறிச்சி—வேலப்பர் புளியங்குளம். உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | கரம்பைக்காடு | அ. அகம்மது நெயினா | காடு | 2 | 0 | 3 | 16 |
| 2 | ஷை | சீனிமுகம்மதுலெவ்வை | காடு | 2 | 0 | 0 | 16 |
| | பிளான் இலக்கம் 5,752. குறிச்சி—இலுப்பைக்குளம். உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | பாலையடிக்காடு | அ. குப்புமரக்காயர் | காடு | 1 | 3 | 30 | 16 |
| 2 | ஷை | — | காற்பாதைக்காக விடப்பட்டது | 0 | 0 | 1 | —* |

| காணித்துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர் | விபரம். | விசாலம். ஏ. | று. | ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | **பிளான் இலக்கம் 5,754. குறிச்சி—கற்குளம். உரித்தாளி—முடி.** | | | | | | |
| 1 | கரம்பைக்காடு .. | — | .. குளக்கட்டுக்காக விடப்பட்டது | 0 | 2 | 9 | —* |
| 2 | ஷை .. | வே. கந்தையா | .. காடு .. .. | 1 | 2 | 35 | 16 |
| 3 | புளியடிக்கமம் .. | நெ. நாகூர்ப்பிச்சை | .. காடு .. .. | 2 | 0 | 0 | 16 |
| 4 | பயனியடியிற்கமம் .. | அ. நாகூரான் | .. காடு .. .. | 5 | 0 | 38 | 16 |
| 5 | ஷை .. | — | .. கால்பாதைக்காக விடப்பட்டது | 0 | 0 | 12 | —* |
| 6 | ஷை .. | — | .. பூமடு ஆற்றுக்காக விடப்பட்டது | 0 | 0 | 19 | —* |
| | **பிளான் இலக்கம் 5,759. குறிச்சி—இராசேந்திரங்குளம். உரித்தாளி—முடி.** | | | | | | |
| 1 | கரம்பைக்காடு .. | கு. மீராசாய்பு | .. காடு .. .. | 3 | 1 | 15 | 16 |
| 2 | ஷை .. | ஷை | .. கால்பாதைக்காக விடப்பட்டது | 0 | 0 | 1 | —* |
| | **பிளான் இலக்கம் 5,760. குறிச்சி—கோதண்டர் நொச்சிக்குளம். உரித்தாளி—முடி.** | | | | | | |
| 1 | வெம்படிக்கமம் .. | வே. தம்பி ஐயா | .. காடு .. | 6 | 2 | 24 | 17† |
| 2 | சாளம்பையடிக்கமம் .. | சி. சும்பையா | .. காடு .. .. | 5 | 3 | 27 | 17·50† |
| | **பிளான் இலக்கம் 5,761. குறிச்சி—வேலப்பர் புளியங்குளம். உரித்தாளி—முடி.** | | | | | | |
| 1 | ஆத்தியடிக்கமம் .. | க. கச்சு | ... காடு .. .. | 1 | 3 | 28 | 16 |
| 2 | ஆத்தியடிக்காடு .. | — | .. வண்டிப்பாதைக்காக விடப்பட்டது | 0 | 0 | 30 | —* |
| | **குறிச்சி—புதுக்குளம்.** | | | | | | |
| 3 | கரம்பைக்காடு .. | — | .. வண்டிப்பாதைக்காக விடப்பட்டது | 0 | 0 | 16 | —* |
| 4 | ஷை .. | க. நாகூரான் | .. காடு .. | 1 | 2 | 32 | 16 |
| 5 | ஆத்தியடிக்கமம் .. | அ. மிதாறுப்பிச்சை | .. காடு .. .. | 5 | 1 | 8 | 16 |
| | **பிளான் இலக்கம் 5,762. குறிச்சி—மருதங்குளம். உரித்தளி—முடி.** | | | | | | |
| 1 | இலுப்பையடிவளவு .. | ச. கந்தர் | .. காடு .. .. | 1 | 0 | 22 | 18† |
| | **பிளான் இலக்கம் 5,763. குறிச்சி—வேப்பங்குளம். உரித்தாளி—முடி.** | | | | | | |
| 1 | பனிச்சையடிக்கமம் .. | க. சின்னத்தம்பி | .. நெற்செய்கைக்கேற்ற காடு | 2 | 0 | 18 | 18† |
| 2 | பாலையடிக்கமம் .. | வீ. அண்ணாமலை | .. ஷை .. | 1 | 3 | 35 | 16 |
| 3 | குருமன்காடு .. | வீ. சின்னையா | .. ஷை .. | 4 | 0 | 0 | 18† |
| 4 | நாவலடிக்காடு .. | — | .. குளக்கட்டுக்காக விடப்பட்டது | 0 | 2 | 5 | —* |
| | **பிளான் இலக்கம் 5,764. குறிச்சி—மருதங்குளம். உரித்தாளி—முடி.** | | | | | | |
| 1 | இத்தியடிவளவு .. | — | .. ரோட்டுக்காக விடப்பட்டது | 0 | 0 | 4 | —* |
| 2 | ஷை .. | சி. கதிரன் | .. வெளிநிலம் .. | 0 | 0 | 34 | 16 |
| | **பிளான் இலக்கம் 5,766. குறிச்சி—கல்நாட்டின்குளம். உரித்தாளி—முடி.** | | | | | | |
| 1 | குருமன்காடு .. | ச. சிதம்பரப்பிள்ளை | .. காடு .. .. | 2 | 2 | 28 | 16 |
| | **பிளான் இலக்கம் 5,772. குறிச்சி—கல்நாட்டினகுளம். உரித்தாளி—முடி.** | | | | | | |
| 1 | கரம்பைக்காடு .. | க. முருகன் | .. காடு .. | 13 | 1 | 38 | 19† |
| 2 | .. ஷை .. | — | .. வாய்க்காலுக்காக விடப்பட்டது | 0 | 1 | 3 | —* |
| | **பிளான் இலக்கம் 5,779. குறிச்சி—பம்பைமடு. உரித்தாளி—முடி.** | | | | | | |
| 1 | கரம்பைக்காடு .. | கு. கந்தையா | .. காடு .. | 2 | 3 | 13 | 16 |
| 2 | விளாத்தியடிக்கமம் .. | ஷை | .. காடு .. | 4 | 0 | 2 | 16 |
| | **பிளான் இலக்கம் 5,782. குறிச்சி—பெரியபுளியங்குளம். உரித்தாளி—முடி.** | | | | | | |
| 1 | குருமன்காடு .. | — | .. குளக்கட்டுக்காக விடப்பட்டது | 0 | 1 | 16 | —* |
| 2 | நாவலடிவளவு .. | க. வெற்றி | .. காடு .. | 1 | 0 | 2 | 26† |
| 3 | ஷை | — | .. பாதைக்காக விடப்பட்டது | 0 | 0 | 7 | —* |
| | **பிளான் இலக்கம் 5,786. குறிச்சி—அலைகல்லுப்போட்டகுளம். உரித்தாளி—முடி.** | | | | | | |
| 1 | நறுவிலியடி ... | க. கணவதிப்பிள்ளை | .. காடு .. | 1 | 0 | 1 | 17† |
| 2 | இத்தியடிக்காடு .. | சோ. பர்வு | .. நெற்செய்கைக்கேற்ற காடு | 2 | 0 | 10 | 16 |
| 3 | காஞ்சூரையடிவளவு | சு. வயிரவி .. | .. வெளிநிலம் .. | 1 | 0 | 1 | 16 |
| 4 | பனையடிக்காணி .. | — | .. குளக்கட்டுக்காக விடப்பட்டது | 0 | 1 | 26 | —* |
| | **பிளான் இலக்கம் 5,790. குறிச்சி—இராசேந்திரங்குளம். உரித்தாளி—முடி.** | | | | | | |
| 1 | கோணலடியிற்காடு .. | கா. நாகமணி உடையார் | .. காடு .. .. | 4 | 0 | 28 | 16 |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம் ஏ. றூ. ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|
| 2 | கோணலடியிற்காடு .. | — .. | குளக்கட்டுக்காக விடப்பட்டது | 0 3 0 | —* |
| 3 | ஷை .. | — .. | பாதைககாக விடப்பட்டது | 0 0 17 | —* |

பிளான் இலக்கம் 5,793. குறிச்சி—மாதர்ப்பணிக்கமளிளங்குளம். உரித்தாளி—முடி.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | புளியடிக்கமம் .. | — .. | மைனர் ரோட்டுக்காக விடப்பட்டது | 0 1 8 | —* |
| 2 | ஷை .. | சு. சின்னையா .. | நெற்செய்கைக்கேற்ற காடு | 2 3 27 | 17·50† |

பிளான் இலக்கம் 5,794. குறிச்சி—கோளியகுளம். உரித்தாளி—முடி.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | கரம்பைக்காடு .. | — .. | வயற்பீலிக்காக விடப்பட்டது | 0 0 26 | —* |
| 2 | ஷை .. | சு. சின்னத்தம்பி .. | காடு .. .. | 4 0 6 | 16 |
| 3 | ஷை .. | — .. | குளக்கட்டுக்காக விடப்பட்டது | 0 3 0 | —* |

பிளான் இலக்கம் 5,796. குறிச்சி—தவசியூர். உரித்தாளி—முடி.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | இத்தியடிவளவு .. | ஐயம்பிள்ளைபெண் சேதுப்பிள்ளை | வெளிநிலம் .. | 0 2 27 | 16 |
| 2 | யார்க்காடு .. | — .. | ரோட்டுக்காக விடப்பட்டது | 0 0 10 | —* |

பிளான் இலக்கம் 5,797. குறிச்சி—மருதங்குளம். உரித்தாளி—முடி.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | புளியடி வளவு .. | ச. கனகரெத்தினம் .. | காடு .. | 2 2 13 | 21† |
| 2 | ஷை .. | ஷை .. | பாதைக்காக விடப்பட்டது | 0 0 20 | —* |

பிளான் இலக்கம் 5,798. குறிச்சி—பூவரசங்குளம். உரித்தாளி—முடி.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | கரம்பைக்காடு .. | அ. சிவசங்கு .. | வெளிநிலம் .. | 1 0 0 | 16 |
| 2 | ஷை .. | — .. | ரோட்டுக்காக விடப்பட்டது | 0 0 39 | —* |

* விற்பனவுக்கல்ல. † மரத்து விலையை உடக்கியிருக்கிறது.

இக்காணிகளைப்பற்றிய வேறு விபரங்களை முல்லைத்தீவு உதவி ஏசன்றுத்துரையிடத்திலும் படங்களைப்பற்றிச் சர்வேயர் ஜெனறலிடத்திலும் அறிந்துகொல்லலாம்.

கொலோனியல் சக்கிறத்தார் கந்தோர்,
கொழும்பு, 1923 ம் ஸ்ரீ தைமீ 10 ந் உ.

பி. ஹோஸ்பரோ,
அக்றிங் கொலோனியல் சக்கிறத்தார்.

---

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள.

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பாணந்துறைப் பட்டிணத்தின் திருத்தத்தின்பொருட்டு, கொழும்பு-காலி ரோட்டின் 17 ம் கட்டையைச் சற்றே தள்ளிப் புதிய ரோட்டை உண்டாகுவது என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 17,562. குறிச்சி—பட்டிய வடக்கு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 12 | தெல்ககவத்தை .. | கிணறும் தென்னையும்கொண்ட தோட்டம் | டீ. ஏ. அபயசேகரவும் இன்னொருவரும் | 0 0 39·04 |
| 12A | வெலிப்பிற்றியவத்தை .. | தென்னந்தோட்டம் .. | டீ. ஜே. ஜயசுந்தரவும் மறுபேரும் | 0 0 21·93 |
| 90 | வெலிப்பிற்றியேவத்தை | காணும் தென்னையும் கொண்ட தோட்டம் | ஷை .. | 0 0 9·53 |
| 90A | ஷை .. | ஷை .. | ற்றீ ஏச். பெர்ணாந்து .. | 0 0 5·82 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1923 ம் ஸ்ரீ பெப்ருவரி மாசம் 26 ந் தேதியிலன்று காலை 10 மணிக்குக் களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1923 ம் ஸ்ரீ ஜனவரிமீ 6 ந் உ.

ஈ. ற்றீ. மிலிங்டன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பாத்ததும்பறையில் தெல்தெனிய வகலஎலவைச்சேர்ந்த வாய்க்காலைத் திருத்துவதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடம் 7,409. குறிச்சி—தெல்தெனிய கிராமம்.

| துண்டு. | காணியினது பெயர் | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | வடுகெதறவத்தை .. | .. தோட்டம் | .. எல். கிரிபண்டா .. | .. 0 1 2·4 |

பிரதமபடம் 7,410. குறிச்சி—கும்புறுகெதற கிராமம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | நமனவிதானலாகே கெதற வத்தை .. | தோட்டம் | .. எஸ். ஐடுறூஸ்ம் வேறுட்களும் | .. 0 0 29·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1923 ௵ பெப்பிறவறிமாசம் 2 ௳ தேதியிலன்று இரண்டு மணிக்கு கண்டி கச்சேரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1923 ௵ யனவரி௴ 5 ௳.

டபிள்யு. எல். கிண்டேர்ஸ்லி,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பென்தறை பாடசாலைக்கு விளையாட்டு பிட்டனிக்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படுங் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம். 12,171. குறிச்சி—பகுருமுள்ளை.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பள்ளியவத்தை | .. தோட்டம் | .. (1) கே. கே. நிகுலஸ், (2) ஈ. எச். எஸ். கருணாரத்ண, (3) ஆர். டப்ளிவ். எஸ். கருணாரத்ன, (4) ஜே. எச். இகனாயக, (5) நண்சி இகனாயக (6) வியனோறு இகனாயகவும் மற்றவர்களும் | 0 1 3·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1923 ௵ பெப்றவரி மாதம் 9 ௳ தேதியிலன்று 2 மணிக்கு காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1923 ௵ ஜனவரி௴ 5 ௳.

எவ். பாட்லெட்,
தென்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

## உரிமைபெறும் யாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

---

[அறிவித்தல் இல. 8,247, கொழும்பு.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொத்லப்படும் காணிகளிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள், 1923 ௵ (ஜனவரி) தை௴ 12 ௳ தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கொழும்புக் கச்சேரியில் கொழும்பு நீர்கொழும்பு டிஸ்திறிக்கின் உப உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் அல்லது எழுத்துமூலமாக தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதிததாலன்றி, சொல்லப்பட்ட உப உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு மேற்சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவஙகளின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகள் முடிக்குரிய என அவர்களுண்டய கையொப்பத்தோடு எழுததிலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

எல். எல். கன்ரர்,
கொழும்பு நீர்கொழும்பு டிஸ்திறிக்கின் உப உதவி அரசாட்சி ஏசென்று.

கவனிப்பு.—குறித்த காணிகளுக்கூடாக விருக்கும் வழிப்பாதை உரித்து காணிகளிலுள்ள சோந்தைக்குறித்து.

குறித்த காணிகளின் விபரம்.

மேல்மாகாணம் கொழும்பு டிஸ்திறிக் கேவகம் கோறளையில் மெதபத்துவில் பருவ என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைத்திருக்கும் படப்பிரதிகளில்* விபரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் 17,545.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | அக்கோனேகேன அல்லது நாபிரித்தலந்த | 3 | 2 | 17 |
| 2 | அக்கோனேகேன .. .. | 4 | 0 | 2 |
| 3 | ஷை (வழிப்பாதைக்குச் சேமித்த நிலம்) .. | 0 | 3 | 20 |
| 4 | ஷை .. .. | 3 | 3 | 10 |
| 5 | ஷை .. .. | 1 | 1 | 22 |
| 6 | ஷை .. .. | 2 | 0 | 19 |
| 9 | கட்டனகேதெனியலந்த .. .. | 2 | 2 | 11 |
| 10 | நாபிரித்தலந்த .. .. | 4 | 1 | 5 |
| 11 | பல்லேகும்புற .. .. | 3 | 2 | 16 |

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 12 | பல்லேகும்புற .. .. | 1 | 1 | 31 |
| 14 | பல்லேகும்புறதெனிய .. | 3 | 0 | 17 |
| 15 | கல்வலமுல்லேலந்த .. .. | 6 | 1 | 3 |
| 16 | ஷை .. .. | 8 | 0 | 6 |
| 17 | மரியாபொலலந்த அல்லது நாபிரித்தலந்த | 6 | 1 | 13 |
| 18 | ஷை ஷை (வழிப் பாதைக்காகச் சேமித்திருக்கும் நிலம்) .. | 0 | 0 | 18 |
| | | 5 | 2 | 10 |

எல்லைகளாவன: வடக்கு-முடி உரித்தாடும் பருவ; கிழக்கு-கட்டுப்பட்ட நீர் ஒட்டம், முடி உரித்தாடும் பருவ, முடி உரித்தாடும் நாபிரித்தாலந்த, முடி உரித்தாடும் பருவ, முடி உரித்தாடும் பருவதெனியவும் முடி உரித்தாடும் மாரியபொல கும்புற; தெற்கு-297,015 ம் உ. ப. ல் விபரித்திருக்குங் காணி, முடி உரித்தாடும் கட்டங்கேதெனிய, (பி. ப. 17,545/7), முடி உரித்தாடும் கல்வலமுல்லேலந்த (பி. ப. 16,596/2) வும் 319,514 ம் உ. ப. ல் விபரித்திருக்குங் காணியும்; மேற்கு-முடி சேமித்திருக்கும் அத்தனபொலலந்த அல்லது தெனியாயலந்த (பி. ப. 16,992/2) முடி உரித்தாடும் அத்தனபொலலந்த அல்லது தெனியாயலந்த (பி. ப. 16,992/1), ஜே. ஜயசூரிய உரித்தாடும் கசாட்டகாவத்த, ஜே. ஜயசூரிய உரித்தாடும் அகோனேதெனிய, முடி உரித்தாடும் அகோனேதெனிய, முடி உரித்தாடும் அகோனேதெனிய, முடி உரித்தாடும் அகோனேயேன, 321,581 ம் உ. ப. ல். விபரித்திருக்குங் காணி, முடி சேமித்திருக்கும் அக்கோனேகேன (பி. ப. 16,196/2), 291,291 ம் உ. ப. ல் விபரித்திருக்குங் காணி, முடி உரித்தாடும் கல்வலகொடல்ல (பி. ப. 17,545/13) 291,291 ம் உ. ப. ல் விபரித்திருக்குங் காணி, ஏ. பபாஅப்புவும் மற்றவர்களு முரித்தாடும் கோலாணிகும்புற, முடி உரித்தாடும் பருவ.

II.—பிரதமபடம் 17,545.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 8 .. | கத்தனகேதெனியலந்த .. .. .. .. | 1 | 3 | 4 |

எல்லைகளாவன: வடக்கு-முடி உரித்தாடும் கத்தனகேதெனிய (பி. ப, 17,545/7); கிழக்கு-முடி உரித்தாடும் கத்தன கேதெனிய (பி. ப. 17,545/7), 297,015 ம் உ. ப. ல் விபரித்திருக்குங் காணி; தெற்கு-முடி உரித்தாடும் மிரிஸ்வத்துமூக்கலான (பி. ப. 16,596/3); மேற்கு-முடி உரித்தாடும் மிரிஸ்வத்துமூக்கலான (பி. ப. 16,596/3) வும் முடி உரித்தாடும் கல்வல முல்லேலந்தவும் (பி. ப. 16,596/2), கட்டுப்பட்ட நீரோட்டம்.

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 28—29 பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

---

## அரசாட்சியாரின் விளம்பரம்.

### 1893 ம் ஆண்டின் இறைச்சிக்காரருக்குரிய கட்டளைச்சட்டம்.

எட்டியாந்தோட்டை மாடு ஆடு அடிக்குமிடமென்று 1910 ம் ஆண்டு புரட்டாதி௴ 23 ௳ திகதியைக்கொண்ட 6,403 ம் இலக்கக் கவுண்மேந்து "கஜற்" பத்திரிகையில் பிரசித்தஞ்செய்யப்பட்ட குறித்த இடத்தைப்பற்றி சப்பிரகாம மாகாணம் கேகாலை டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏஜண்டர் அவர்களால், 1893 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 23 ம் பிரிவுக்கமைவாக செய்யப்பட்டதும் அதியுத்தமம் அவர்களால் சட்ட நிருவாக சபையில் நிலைநிறுத்தப்பட்டதுமான, பின்வரும் கட்டளைகளும் சட்டங்களும் யாவரு மறியும்படி பிரசுரப்படுத்தப்படுகின்றது.

1911 ம் ஆண்டு வைகாசி௴ 8 ௳ திகதியின் 6,440 ம் இலக்கக் கவுண்மேந்து "கெஜற்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1911 ம் ஆண்டு வைகாசி௴ 8 ௳ திகதியின் உபவிதிகள் இத்தால் அழிக்கப்படுகின்றது.

அதியுத்தம தேசாதிபதியவர்களின் ஆஞ்ஞைப்படி,

இராசமாலிகிதரின் கந்தோர்,
கொழும்பு, 1923 ம் ௵ தை௴ 8 ௳.

பி. ஹோர்ஸ்பரோ,
அக்றிங் இராசமாலிகிதர்.

### குறிக்கப்பட்ட பிரமாணங்களும் ஒழுங்குகளும்.

1. சொல்லப்பட்ட மாடு அடிக்கு மிடத்தில் காலமே 6 மணிக்கும் 7 மணிக்கு மிடையேயல்லாமல் வேறு நேரம் மாடு அடிக்கக் கூடாது.

2. மாடு கொல்வதற்கு 24 மணித்தியாலத்துக்குமுன் மாடு கட்டுமிடம் எட்டியாந்தோட்டை நகரிலிருக்கும் மாட்டுக்கொட்டு என்னும் இடமே.

3. இலைசென்ஸ் பெற்ற ஒவ்வொரு இறைச்சிக்காரனும் அடிக்க விரும்பும் மாட்டை அல்லது ஆட்டை காலமே 8 மணிக்கு முன் டிஸ்திறிக் வைத்திய உத்தியோகத்தர் சோதனைசெய்யும்படி காட்டவேண்டும். டிஸ்திறிக் வைத்திய உத்தியோகதர் மாடாயின் அந்த மாடு மனுஷர் சாப்பிடுகிறதற்கு சுகமுள்ளதும் தகுதியுள்ளதுமோ அல்லது மனுஷர் சாப்பாட்டுக்கு அடிக்கிறதற்கு தகுதியல்லதோ என்று அவருக்குக் காட்டப்படும் மாட்டுச் சீட்டில் அவரின் கருத்தைக் குறிக்க வேண்டும். வெள்ளாடுகள் அல்லது செம்மறியாயின் அவைகளை அடிப்பதற்கு எழுத்தில் உத்தரவு கொடுக்க வேண்டும்.

4. ஒரு மிருகத்தை அடித்தபின் அதின் இறைச்சி மனுஷர் சாப்பாட்டுக்கு நல்லதல்லவென்று தோன்றினால் அந்த இறைச்சியை சுகாதார இன்ஸ்பெக்டர் டிஸ்திறிக் வைத்திய உத்தியோகத்தருககு காட்டவேண்டும், டிஸ்திறிக் வைத்திய உத்தியோகத்தர் அந்த இறைச்சி ஆகாதென்று தீர்த்தால் அதை உடனே புதைத்துப்போடச் செய்து அச்செய்தியை கேகாலை டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசண்டர் அவர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

5. மாடு ஆடு அடித்த பிற்பாடு உரித்துத் துப்பரவுபண்ணி அதற்காக வைத்திருக்கும் அறையில் அன்றைக்கே தூக்கப்படவேண்டும். காலமே 8 மணி வரைக்கும் விற்பனவுக்காக இறைச்சி உத்தரவு பெற்றாலல்லாமல் கொண்டுபோகக் கூடாது.

6. மாடு அடிக்கும் இடத்தைப் பாவிக்கும் ஒவ்வொரு இறைச்சிக்காரனும் அல்லது ஆளும் இதன் கீழ் சொல்லப்படும் கூலியைக் கொடுக்க வேண்டும்.

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒவ்வொரு மாட்டுக்கு .. .. .. .. | 0 | 50 |
| ஒவ்வொரு வெள்ளாடு அல்லது செம்மறிக்கு .. .. .. | 0 | 25 |

7. எல்லாக் கூலிக்காசையும் சுகாதார இன்ஸ்பெக்டருக்கு முன்னேறக் கொடுக்கவேண்டும்.

8. மாடு அடிக்கும் ஆட்கள் ஒவ்வொருவரும் மாடு அடிக்கும் இடத்தை உடனே நல்லாய்த் துப்பரவு பண்ணி, இரத்தத்தையும் மற்ற அழுக்குகளையும் புதைத்துப் போடவேண்டும். சுகாதார இன்ஸ்பெக்டர் சொல்லும் விதமாய் இக்கடமைகள் செய்யப்பட வேண்டியது.

9. எவராவது மாடு அடிக்கு மிடத்தில் மற்ற மிருகங்கள் முன்னிலையில் அல்லது முன் கொல்லப்பட்ட மிருகத்தின் இறைச்சி அவ்விடத்திலிருந்து எடுக்கப்பட்டு அல்லது மறைக்கப்பட்டு இடஞ் சுத்தப்படுத்தப்பட்டாலன்றி எம்மிருகத்தை யாவது அடிப்பது முறையல்ல.

---

1893 ம் ஆண்டின் இறைச்சிக்காரருக்குரிய கட்டளைச்சட்டம்.

தெய்யோவிட்டியில் மாடு ஆடு அடிக்குமிடமென்று 1912 ம் ஆண்டு ஐப்பசிமீ 4 ந் திகதியைக்கொண்ட 6,525 ம் இலக்கக் கவுண்மேந்து "கஜற்" பத்திரிகையில் பிரசித்தஞ்செய்யப்பட்ட குறித்த இடத்தைப்பற்றி சப்பிரகாம மாகாணம் கேகாலை டிஸ்திறிக் உதவி ஏசண்டர் அவர்களால் 1893 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 23 ம் பிரிவுக்கமைவாக செய்யப்பட்டதும் அதிஉத்தமர் சட்டநிருவாக சபையில் நிலைநிறுத்தப்பட்டதுமான பின்வரும் கட்டளைகளும் சட்டங்களும் யாவரு மறியும்படி பிரசுரப்படுத்தப்படுகின்றது.

1913 ம் ஆண்டு சித்திரைமீ 25 ந் திகதியின் 6,559 ம் இலக்கக் கவுண்மேந்துக் "கஜற்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1913 ம் ஆண்டு சித்திரைமீ 17 ந் திகதியின் உபவிதிகள் இத்தால் அழிக்கப்பட்டிருக்கின்றது.

அதிஉத்தம தேசாதிபதி யவர்களின் ஆஞ்ஞைப்படி,

இராசமா விகிதரின் கந்தோர்,
கொழும்பு, 1923 ம் ஞூ தைமீ 8 ந உ.

பி. ஹோர்ஸ்பரோ,
அக்டிங் இராசமாவிகிதர்.

குறிக்கப்பட்ட பிரமாணங்களும் ஒழுங்குகளும்.

1. சொல்லப்பட்ட மாடு அடிக்குமிடத்தில் காலமே 6 மணிக்கும் 7 மணிக்குமிடையே யல்லாமல் வேறு நேரம் மாடு அடிக்கக்கூடாது.

2. மாடு கொல்ல 24 மணித்தியாலத்துக்குமுன் மாடு கட்டுமிடம் கல்லெலிப்பிற்றியகேனே என்னுங் காணியிலிருக்குங் கட்டடமே.

3. லைசென்ஸ்பெற்ற ஒவ்வொரு இறைச்சிக்காரனும் அடிக்க விரும்பும் மாட்டை அல்லது ஆட்டை காலமே 8 மணிக்கு முன் டிஸ்திறிக் வைத்திய உத்தியோகத்தர் சோதனைசெய்யும்படி காட்டவேண்டும். டிஸ்திறிக் வைத்திய உத்தியோகஸ்தர் மாடாயின் அந்த மாடு மனுஷர் சாப்பிடுகிறதற்கு சுகமுள்ளதும் தகுதியுள்ளதுமோ அல்லது மனுஷர் சாப்பாட்டுக்கு அடிக்கிறதற்கு தகுதியல்லதோ என்று அவருக்குக் காட்டப்படும் மாட்டுச்சீட்டில் அவரின் கருத்தைக் குறிக்க வேண்டும், வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகளாயின் அவைகளை அடிப்பதற்கு எழுத்தில் உத்தரவுகொடுக்க வேண்டும்.

4. ஒரு மிருகத்தை அடித்தபின் அதின் இறைச்சி மனுஷர் சாப்பாட்டுக்கு நல்லதல்ல வென்று தோன்றினால், அந்த இறைச்சியை சுகாதார இன்ஸ்பெக்டர் டிஸ்திறிக் வைத்திய உத்தியோகஸ்தருக்கு காட்டவேண்டும், அவ்வுத்தியோகஸ்தர் அந்த இறைச்சி ஆகாதென்று தீர்த்தால் அதை உடனே புதைத்துப்போடச்செய்து, அச்செய்தியை கேகாலை டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசண்டர் அவர்களுக்கு அறிவிக்கவேண்டும்.

5. மாடு அடித்தபிற்பாடு உரித்துத் துப்பரவுபண்ணி அதற்காக வைத்திருக்கும் அறையில் அன்றைக்கே தூக்கப்படவேண்டும் காலமே 8 மணிவரைக்கும் விற்பனவுக்காக இறைச்சி உத்தரவுபெற்றாலல்லாமல் கொண்டுபோகக் கூடாது.

6. மாடுஅடிக்கும் இடத்தைப் பாவிக்கும் ஒவ்வொரு இறைச்சிக்காரனும் அல்லது ஆளும் இதன்கீழ்ச் சொல்லப்படும் கூலியைக் கொடுக்கவேண்டும்:—

| | |
|---|---|
| ஒவ்வொரு மாட்டுக்கு .. .. .. .. | சதம் 50 |
| ஒவ்வொரு வெள்ளாடு அல்லது செம்மறிக்கு .. .. .. | ,, 25 |

7. எல்லாக் கூலிக்காசையும் சுகாதார இன்ஸ்பெக்டருக்கு முன்னேறக் கொடுக்கவேண்டும்.

8. மாடுஅடிக்கும் ஆட்கள் ஒவ்வொருவரும் மாடுஅடிக்கும் இடத்தை உடனே நல்லாய்த் துப்பரவுபண்ணி, இரத்தத்தையும் மற்ற அழுக்குகளையும் புதைத்துப்போட வேண்டும். சுகாதார இன்ஸ்பெக்டர் சொல்லும் விதமாய் இக்கடமைகள் செய்யப்பட வேண்டியது.

9. எவராவது மாடுஅடிக்கு மிடத்தில் மற்றமிருகங்கள் முன்னிலையில் அல்லது முன்கொல்லப்பட்ட மிருகத்தின் இறைச்சி அவ்விடத்திலிருந்து எடுக்கப்பட்டு அல்லது மறைக்கப்பட்டு இடஞ் சுத்தப்படுத்தப்பட்டாலன்றி எம்மிருகத்தை யாவது அடிப்பது முறையல்ல.

1892 ம் ஆண்டின் சிறு பட்டணங்களின் சுகாதார கட்டளைச்சட்டம்.

1921 ம் ஆண்டின் 20 ம் இலக்க கட்டளைச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1892 ம் ஆண்டின் 18 ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின் 9 E (2) பிரிவின் பிரகாரம் கேகாலே டிஸ்திறிக் சுகாதார சங்கத்தாரால் செய்யப்பட்ட பின்வரும் உபவிதிகள் சட்ட நிருவாக சபையினனுமதியுடன் தேசாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்டு சகலரு மறியும்படி இத்தால் பிரசித்தப் படுத்தப்படுகின்றது.

தேசாதிபதியவர்களின் ஆஞ்ஞைப்படி,

இராசமா லிகிதரின் கந்தோர்,
கொழும்பு, 1923 ம் ஹூ தைமீ 11 ந உ.

பி. ஹோஸ்பரூ,
கொலோனியல் சக்கிடுத்தார்.

படலம் 10.

கக்கூசைப்பற்றிய உபவிதிகள்.

1. ஒரு காணியில் இருப்பவன் அல்லது அந்தக் காணிச் சொந்தக்காரன் சங்கத்தலைவரிடத்திலிருந்து எழுத்து மூலமாக உத்தரவு பெறுமல் ஒரு கக்கூசு, குளிக்கக்கூசு அல்லது வாளிக் கக்கூசு அந்தக் காணியில் அல்லது அதற்கயலில் உண்டாக்கவும் அல்லது உண்டாக்கிவிக்கவும்படாது.

2. (a) 1 பிரமாணத்தின்படி மேற்சொல்லிய உத்தரவுக்கு எழுதிக்கேட்டால் சங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு குறித்த விதமான கக்கூசு, குளிக்கக்கூசு அல்லது வாளிக் கக்கூசு அல்லாத வேறொரு விதமான கக்கூசும் உண்டாக்காதபடி சங்கத்தலைவரால் அல்லது சங்கத்தால் கட்டளைசெய்தல் கூடும்.

(b) மேலும் அப்படியான கக்கூசு குளிக்கக்கூசு அல்லது வாளிக் கக்கூசு உண்டாக்கப்படவேண்டிய இடம் எதுவென்று சங்கத்தலைவரால் அல்லது சங்கத்தால் செய்யப்படும். அந்தக் கக்கூசை, குளிக் கக்கூசை அல்லது வாளிக் கக்கூசை வேறு இடத்தில் கட்டுகிறதற்கு உத்தரவு கொடுக்காமல் விடவும் ஏலும்.

(c) சுக ஆதாரதின்பொருட்டு உத்தரவு கொடுக்கப்படாதென்று சங்கத்தலைவருக்கு அல்லது சங்கத்துக்கு தோற்றினால் ஒரு வளவுக்குள் துண்டாய் யாதும் கக்கூசு, குளிக் ககசுசு அல்லது வாளிக் கக்கூசு உண்டாககுகிறதற்கு சங்கத்தலைவர் அல்லது சங்கம் உத்தரவு கொடுக்காமல் விடலாம்.

3. (a) உத்தரவு பெறுமல் அல்லது சங்கததலைவரால் அல்லது சங்கத்தால் கொடுபட்ட உத்தரவின் கட்டுப்பாடுகளை யாதும் வகையாய் மீறிக் கட்டுப்பட்ட ஒரு கக்கூசை, குளிக் கக்கூசை அல்லது வாளிக் கக்கூசை அழித்து சங்கத்தலைவரால் அல்லது சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நியாயமான காலத்துக்குள் நிரப்பவேண்டுமென்று அந்த நிலத்தின் சொந்தக்காரனை அல்லது நிலத்திலிருப்பவனைச் சங்கத்தலைவர் அல்லது சங்கத்தார் எழுத்துமூலமாகக் கட்டளைபண்ணக்கூடும்.

(b) இந்தக் கட்டளைச்சட்டத்தின் (a) பிரிவில் காட்டிய கட்டளையின்படி செய்யாத ஒவ்வொருவரும் குற்றவாளியாவார்.

4. (a) சங்கத்தாரால் ஏற்பாடு செய்யப்பட்ட விதமாயும், பருப்பமாயும் இடத்திலும், வாய்க்கால்களுள்ளதாயும் ஒரு கக்கூசு அல்லது வாளிக் கக்கூசு குறிக்கப்பட்ட காலத்துக்குள் உண்டாக்கும்படி ஒரு வளவின் சொந்தக்காரனை அல்லது அதில் இருப்பவனை எழுத்து மூலமாகச் சங்கத்தார் கட்டளை செய்யக்கூடும்.

(b) இந்தக் கட்டளைச்சட்டத்தின் (a) பிரிவில் காட்டிய கட்டளையின்படி செய்யாத ஒவ்வொருவரும் குற்றவாளியாவார்.

5. (a) சங்கத்தாரால் ஏற்பாடுபண்ணின மாதிரியாயும் சங்கத்தாரால் நியமிக்கப்பட்ட காலத்துக்குள்ளும் ஒரு கக்கூசை, குளிக்கக்கூசை, அல்லது வாளிக்கக்கூசைத் திருத்த அல்லது மாற்ற அல்லது திருப்பிக்கட்டும்படி அல்லது நியமிக்கப்பட்ட காலத்துக்குள் அழிதது நிரப்பும்படி நிலத்தின் சொந்தககாரனை அல்லது அதிலிருப்பவனைச் சங்கத்தார் கட்டளைசெய்யக்கூடும். சங்கத்தாரின் எண்ணத்தின்படி அப்படிப்பட்ட கக்கூசை, குளிக் கக்கூசு அல்லது வாளிக் கக்கூசு கட்டினதில் குறைவுள்ளதாயிருந்தால் அல்லது கட்டப்பட்ட உபயோகத்துக்குத் தகுந்ததாயில்லாமல் இருந்தால் அல்லது கெட்ட நாற்றம் வரக்கூடியதாயிருந்தால் 8 ம் உபவிதியின்படி விடப்பட்ட சுகாதார ஒழுங்கையிலிருந்து மலசலம் சுகமாய் எடுக்க ஏலாமயிருந்தால் அல்லது அப்படிப்பட்ட ஒழுங்கைக்கு அருகில் இல்லாவிட்டால் அந்தக் கக்கூசை, குளிக் கக்கூசை, அல்லது வாளிக் கக்கூசை திருத்த, மாற்ற அல்லது திருப்பிக்கட்டச் சங்கத்தாரால் நியமித்த காலத்துக்குள் அதை அழித்து நிரப்பும்படி அநத நிலத்தின் சொநதக்காரனை அல்லது அதிலிருப்பவனைச் சங்கத்தார் கட்டளை செய்யக்கூடும்.

(b) இந்தக்கட்டளைச்சட்டத்தின் (a) பிரிவில்காட்டிய கட்டளையின்படி செய்யாத ஒவ்வொருவரும் குற்றவாளியாவார்.

சொற்களின் கருத்து.

6. கீழே சொல்லப்படும் கட்டளைச்சட்டங்களில் வரும் "குளிக்கக்கூசு" என்னும் சொல், மலசலம் அந்த இடத்திலிருந்து அப்போதைக்கப்போது எடுத்துக்கொண்டு அப்புறப்படுத்தும் வசதியில்லாத விதமான கக்கூசுகள் எல்லாவற்றையும் கருதும் "குறிக்கப்பட்ட விசாலம்" என்னும் சொல், காலத்துக்குக்காலம் சங்கத்தாரால் குறிக்கப்படும் சங்கத்தின் எல்லைக்குள் இருக்கும் நிலத்தை அல்லது நிலங்களைக் கருதும். அப்படிப்பட்ட விசாலம் அந்த எல்லைகளுக்குள் இருக்கும் முழு நிலத்தையும் அடக்கும், அல்லது ஒரு பகுதியை அல்லது பகுதிகளை அடக்கும்.

7. குறிக்கப்பட்ட விசாலத்துக்குள் அல்லது குறிக்கப்பட்ட விசாலத்தின் ஒரு பகுதிக்குள் இருக்கும் எல்லாவிதமான குளிக் கக்கூசுகளையுஞ் சங்கத்தின் தீர்மானத்தால் மூடப்பண்ணிவித்து எல்லாக் கக்கூசுகளும் மலசலம் எடுத்துக் கொண்டு போகக்கூடியதாய் இருக்கவேண்டியதாய் இருக்கவேண்டியதென்று கட்டளைசெய்யக்கூடும்.

8. அப்படிப்பட்ட குளிக்கக்கூசை அல்லது குளிக் கக்கூசுகளை அழித்து மலசலம் எடுத்துக்கொண்டுபோகக்கூடிய கக்கூசு அல்லது கக்கூசுகள் உண்டாக்கும்படி சங்கத்தில் தீர்மானித்து அந்த வீட்டின் அல்லது கட்டிடத்தின் அல்லது நிலத்தின் சொந்தக்காரனுக்கு அல்லது அதிலிருப்பவனுக்கு எழுத்தில் அறிவித்தல் கொடுத்தால், அந்த அறிவித்தல் கொடுத்த நேரந்தொடங்கி சங்கத்தாரால் நியமிக்கப்பட்ட காலத்துக்குள் அந்த அறிவித்தலில் காட்டியபடி எல்லாம் நியாயமான காலத்துக்குள் செய்விக்காமல் விடும் ஒவ்வொரு சொந்தக்காரனும் அல்லது அதில் இருப்பவனும் குற்றவாளியாவான், இந்தக் கட்டளைச்சட்டத்தின்படி ஒரு கக்கூசு உண்டாக்குகிறதற்கு, 1 ம் உபசட்டத்தில் காட்டியபடி, மாதிரி இடம், மற்றுந்தேவைகள் என்னவென்று சங்கத்தலைவர் நியமிக்கும்படி, சங்கத்தலைவரிடம் உத்தரவு கேட்கவேண்டும்.

9. ஒரு கக்கூசு அல்லது வாளிக கக்கூசு இருக்கும் நிலத்தின் சொந்தக்காரன் அல்லது அதில் இருப்பவன் அப்படிப்பட்ட கக்கூசை அல்லது வாளிக் கக்கூசை நல்ல திருத்தமாயும் துப்பரவாயும் சுகாதாரத்துக்கு ஏற்றதாயும் அதால் தீங்குவரக்கூடாததாயும் வைத்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாத ஒவ்வொரு சொந்தக்காரனும் அல்லது அதிலிருப்பவனும் குற்றவாளியாவான்.

10. குறிக்கப்பட்ட விசாலத்துக்குள் இருக்கும் வீட்டின் கட்டிடத்தின் அல்லது நிலத்தின் சொந்தக்காரனை அல்லது அதிலிருப்பவனை 8 அடி அகலத்துக்கு மிஞ்சாத ஒரு ஒழுங்கை சங்கத்தலைவர் தீர்மானித்த இடத்தில் நிலத்துக்குப் பின்னால் அல்லது ஊடாக, மலசலம் செவ்வையாய் எடுத்துக்கொண்டு போகிறதற்காக விட்டு தன் செலவில் வைத்திருக்கவேண்டுமென்று சங்கத்தார் தீர்மானம்செய்து கட்டளைபண்ணுதல் நியாயமுறையாகும்.

11. குறிக்கப்பட்ட விசாலத்துக்குள்ளிருக்கும் எல்லா மலசலமெடுக்கும் வேலையும் சங்கத்தாரால் செய்யப்படும். ஒருவரும் தானே அல்லது வேறுள் மூலமாக அல்லது வேலைக்காரன் மூலமாக அல்லது கூலிக்குப் பிடித்த ஆள்மூலமாக அந்த வேலையைச் சங்கத்தலைவரிடம் எழுத்து மூலமாக உத்தரவுபெறாமற் செய்யப்படாது. அந்த இடத்தில் அப்படிப்பட்ட வேலைகள் யாவும் சங்கத்தாரால் செவ்வையாய்ச் செய்ய ஏலுமென்று எண்ணினால் சங்கத்தலைவர் அப்படிப்பட்ட உத்தரவைக் கொடுக்காமல் விடலாம்.

12. குறிக்கப்பட்ட விசாலத்துக்குள்ளிருக்கும் கக்கூசுகள், வாளிக் கக்கூசுகளின் சொந்தக்காரர்கள் அல்லது அதில் இருப்பவர்கள் யாவரும், மலசலம் எடுத்துக்கொண்டு போகிறதற்காக மாதத்துக்குமாதம் சங்கத்தார் நியமித்தபடி பணங் கொடுக்கவேண்டும். அப்பணங்கள் வேலைசெய்த மாதத்துக்கு அடுத்த மாதம் 10 ந் திகதிக்குமுன் கொடுக்கப்பட வேண்டும். குறிக்கப்பட்ட காலத்துக்குள் அப்பணத்தைக் கொடுக்கத் தவறிய ஒவ்வொருவரும் குற்றவாளியாவார்.

13. நாட்கூலியாள் தேவையானவர்கள் சங்கத்தாருக்கு எழுதிக் கேட்டால் சங்கத்தார் நியமித்த கட்டுப்பாடுகளின் படி அப்படிப்பட்ட கூலியாட்கள் கொடுபடும்.

14. குறிக்கப்பட்ட விசாலத்துக்கு வெளியேயிருக்கும் எவராயினும் தனது கக்கூசில் அல்லது வாளிக் கக்கூசிலிருந்து சங்கத்தார் மூலமாக மலசம் எடுப்பிக்கவேண்டுமானால் அல்லது ஒரு பகல் கூலி தேவையானால், அப்படி தேள்வையென்று சங்கத்தாருக்கு எழுத்து மூலமாக அறிவித்தால் சங்கத்தார் அப்படிப்பட்ட வேலையைச் செய்விக்கக்கூடும்.

15. ஒரு வளவில் புதிதாய் ஒரு கக்கூசுத் தண்ணீர்விழும் குழி வெட்டவேண்டுமென்று அல்லது இருக்கும் குழியை மாற்ற அல்லது திருத்த அல்லது புதிதாய் வெட்ட அல்லது நிரப்ப வேண்டுமென்று சங்கத்தார் எண்ணினால் கக்கூசுத் தண்ணீர்விழும் ஒரு குழி வெட்டவேண்டுமென்று அல்லது இருக்கும் குழியை மாற்ற அல்லது திருத்த அல்லது புதிதாய் வெட்ட அல்லது நிரப்பவேண்டுமென்று சங்கத்தலைவருடைய கையெழுத்துள்ள எழுத்துமூலமாகச் சொந்தக்காரனுக்கு அல்லது அதில் இருப்பவனுக்குச் சங்கத்தார் அறிவிப்பார். அப்படி அறிவித்ததின்பின் அப்பேர்ப்பட்ட கக்கூசுத்தண்ணீர் விழும் குழியினுடைய இடம் மட்டம் பருப்பத்தைப்பற்றியும் பாவிக்கவேண்டிய சாமான்களைப்பற்றியும் செய்விக்க வேண்டிய மாதிரியைப்பற்றியும் அப்பேர்ப்பட்ட வேலைகளோடு சேர்ந்த வேறு அலுவல்களைப்பற்றியும் உள்ள முறைமைகளை அறிவிப்பார். அப்பேர்ப்பட்ட அறிவித்தல் வாங்கியபின் சங்கத்தார் நியமித்த காலத்துக்குள் சங்கத்தார் அறிவித்தபடி எல்லா வேலைகளுஞ் செய்விக்காமல் விடும் ஒவ்வொரு சொந்தக்காரனும் அல்லது அதிலிருப்பவனும் குற்றவாளியாவான்.

16. ஒரு கக்கூசுத்தண்ணீர் விழும் குழிக்குள் அழுக்குத்தண்ணீர் விழுந்து சேர்ந்தால் அந்தக்குளியிருக்கும் வளவின் சொந்தக்காரனுக்கு அல்லது அதிலிருப்பவனுக்கு அந்நாள் தொடக்கம் நாள்தோறும் அப்பேர்ப்பட்ட அழுக்குத் தண்ணீரைச் சங்கத்தார் அள்ளுவிப்பாரென்று சங்கத்தலைவர் அறிவிப்பார். அதுதொடக்கம் சங்கத்தார் நியமித்தபடி அழுக்குத்தண்ணீரை அள்ளுவிக்கிறதற்கு நியாயமான பணம் அந்தச் சொந்தக்காரன் அல்லது அதிலிருப்பவன் கொடுக்க வேண்டும்.

17. அழுக்குத்தண்ணீர் விழுந்துசேரும் கக்கூசுத்தண்ணீர் விழும் குழியிருக்கும் நிலத்தின் சொந்தக்காரன் அல்லது அதிலிருப்பவன், 16 ம் கட்டளைச்சட்டத்திற் காட்டியபடி சங்கத்தலைவர் அறிவிக்காமல் விட்டால் அதால் தீங்குவராதபடி சங்கத்தலைவர் ஏற்றுக்கொண்ட இடத்துக்கு அப்பேர்ப்பட்ட தண்ணீரை நாளுக்குநாள் கொண்டுபோய் ஊற்றுவிக்க வேண்டும். மேலே சொல்லியபடி ஊற்றுவிக்காமம் விடும் ஒவ்வொரு சொந்தக்காரனும் அல்லது அதில் இருப்பவனும் குற்றவாளியாவான்.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

உடப்பிலிருக்கு முப்புக்குதத்தையு முப்புச் சிறுப்பரின் வீட்டையும் பழுதுபார்க்கும் வேலையும் 2 குடிசைகளைக் கட்டும் வேலையும் யொப்பந்தத்திற் கொடுக்கப்படும்.

2. இவ்வொப்பந்தத்தைக் கேட்க விரும்புவோர் தங்கள் கேள்விப்பத்திரங்களை முத்திரித்த உறைகளிலிட்டு, அவைகளி னிடது மூலையில் "உடப்பிலிருக்கு முப்புக்குதத்தையு முப்புச் சிறுப்பரின் வீட்டையும் பழுதுபார்த்து 2 குடிசைகளைக் கட்டு மொப்பந்தக் கேள்வி" யென்றெழுதி புத்தள முதலி யேசண்டவர்கட்கு 1923 ம் ஆண்டு தை மாதம் 22 ந் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு முந்திக் கிடைக்கத்தக்கதாக அனுப்பவேண்டும்.

3. கேள்விக்காறன் தனது கேள்விப்பத்திரத்தை யனுப்பமுந்தி யெந்தக் கச்சேரியிலாவது ஒரு கச்சேரியில் முற்பணமாகப் பத்து ரூபாய் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைக் கேள்விப்பத்திரத்தோ டிணைக்கவேண்டும்.

4. தனது கேள்வி யேற்றுக்கொள்ளப்படுங் காலத்தில் அப்படி யேற்றுக்கொள்ளப்பட்டபின் ஞாயமான காலத்துள் தன் வேலையைக் கிரமமாக முடிப்பதாக வோருடன்படிக்கை பண்ணிக்கொள்ளாவிட்டால் கட்டிய முற்பணம் பறிமுதலாக்கப்படும்.

5. கேள்விக்காறன் தனக்குக் காயிதங்கள் கிடைக்கத்தக்கதாகப் புத்தளத்தில் ஓர் விலாசத்தைக் குறிக்கவேண்டும்.

6. உடன்படிக்கை பண்ணிக்கொண்டபின் 4 கிழமைக்குள் வேலையைக்கிரமமாக முடித்துப்போடவேண்டும்.

7. இன்னும் வேண்டிய விபரங்களைப் புத்தள முப்புத்துரை யவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவும்.

### செய்யவேண்டிய வேலையின் விபரம்.

தற்போது உழுத்தும் பழுதாயும் போயிருக்கும் மரந்தடி இடுகு முதலியவற்றை யெடுத்துப்போட்டுப் புதிய மரந்தடி இடுகு முதலியவற்றைப் போடவேண்டும்.

குதத்துடையவும் சிறுப்பருடையவும் வீட்டுடையவுங் குசினியுடையவுங் கூரையைப் புதுக் கிடுகினால் வேய்ந்து அதற்கு மேலாகப் பாரமாகப் பூட்டுகளை வைக்கவேண்டும்.

10′ × 12′ விசாலமுள்ள 2 சாம்பறைகளுடைய ஒரு வீடு காவற்காரருக்குக் கட்டவேண்டும்.

எஸ். எம். பி. வெந்தர்கோன்,
உதவி யேசண்டருக்காக.

புத்தளம் கச்சேரி,
1923 ம் ஆண்டு தை ௴ 8 ௳.

H. R. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.